**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 05.03.2026**
**OS. No. 395/2012**
**வழக்கு சாட்சி DW.5–விஜயகுமார், த/பெ.மணி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் பெரியசோரகை கிராமம் பழையூர் தாசகாப்பட்டியில் குடியுள்ளேன். 11ம் பிரதிவாதி பழனிசாமி என் தந்தையின் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். என் தந்தை மணி இறந்துவிட்டார் என்றால் சரிதான், 2018 ல் இறந்துவிட்டார். வாதி மற்றும் மற்ற பிரதிவாதிகளை எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர் எனக்கு தாத்தா உறவுமுறை வேண்டும். 1, 2 பிரதிவாதிகள் எங்கள் வீட்டு பக்கத்தில் தான் குடியுள்ளார்கள். எங்கள் வீடு ச.எண்.29/10B ஆகும். 1, 2 பிரதிவாதிகளின் வீடும், அதே சர்வே எண்ணான .29/10B ல் தான் அமைந்துள்ளது. அதில் வடக்குபக்கம் நாங்களும், தெற்குபக்கம் 1, 2 பிரதிவாதிகளும் உள்ளனர். நாங்கள் 14 சென்டில் அனுபவத்தில் உள்ளோம், 1, 2 பிரதிவாதிகளும் 14 சென்ட் நிலத்தில் அனுபவத்தில் உள்ளனர்.

2) எங்கள் நிலத்தில் நாங்கள் வீடு கட்டியும், 4 தறியும் அமைத்துள்ளோம். 1, 2 பிரதிவாதிகள் அனுபவத்திலுள்ள நிலத்திலும் வீடு மற்றும் தறி ஆகியவை உள்ளது. வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் தகப்பனாரான குப்பண்ண கவுண்டரும் என் தாத்தாவின் தந்தையான பழனியப்ப கவுண்டரும் உடன் பிறந்த சகோதரர் ஆவார்கள். அவர்கள் காலத்தில் தான் மேற்கண்ட 14 சென்ட் நிலமானது எங்களுக்குள் பிரிக்கப்பட்டது. குப்பண்ண கவுண்டருக்கு பிரிந்த தென்புறமுள்ள 14 சென்ட் நிலத்தை தான் 1ம் பிரதிவாதி வையாபுரி தனது குடும்ப சொத்துக்களை பாகம் பிரித்து கொண்டபோது அவருக்கு பாகமாக கொடுக்கப்பட்டு அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். எனது கொள்ளுதாத்தா பழனியப்ப கவுண்டருக்கு வந்த 14 சென்ட் நிலமானது

பின்னிட்டு அவரது மகனான எனது தாத்தா சின்னபைய கவுண்டருக்கும் பின்னிட்டு எனது தகப்பனாா மணிக்கும் பாகமாக வந்தடைந்தது என்றால் சரிதான்.

3) வழக்கிலுள்ள ச.எண்.29/10B ல் உள்ள ஒரு பகுதியான 14 செண்ட் நிலத்தையும் மற்றொரு சொத்தான ச.எண்.28/1 ல் உள்ள 10 செண்ட் நிலத்தையும் எங்கள் குடும்பத்தார் தான் அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். மேற்கண்ட சொத்துக்களை என் தகப்பனார் பரமசிவம் என்பவரிடம் கடன் பெற்றதற்காக பெயரளவிலான ஒரு கிரைய பத்திரம் அவருக்கு ஏற்படுத்திக்கொடுத்தார் என்றால் சரிதான். கிரையம் ஏற்படுத்திக்கொடுத்தபோதும் சொத்தின் சுவாதீனம் எங்களிடம் தான் இருந்தது. அதை 2018 ம் வருடம் மார்ச் மாதம் மீட்டு என் தந்தை பெயரிலேயே மறுகிரையம் பெற்றுக்கொண்டோம். அதன் பிறகு இரண்டு மாதத்தில் என் தந்தை இறந்துவிட்டார், அவருக்கு பிறகு அவரது வாரிசான நானும், மற்ற வாரிசுகளும் அனுபவித்து வருகிறோம்.

4) 1 ம் பிரதிவாதி வையாபுரி அவர்கள் தான் இந்த வழக்கு நிலுவையிலுள்ள விவரத்தை 2024 ம் வருடம் டிசம்பர் மாதம் என்னிடம் தெரிவித்தார். அதன் பிறகு நானும், என் பெரியப்பாவும் வழக்கறிஞரை பார்த்து வழக்கு குறித்த விவரத்தை தெரிந்து கொண்டோம் என்றால் சரிதான். ச.எண்.29/10B ல் உள்ள 14 செண்ட் நிலமும், ச.எண்.28/1 ல் உள்ள 10 செண்ட் நிலமும் இந்த வழக்கில் வழக்கு சொத்துக்களாக காட்டப்பட்டிருப்பதை வழக்கறிஞர் மூலமாக தெரிந்து கொண்டோம் என்றால் சரிதான். எங்களுக்கு சொந்தமான வீட்டின் க.எண்.224 மற்றும் மின்இணைப்பு எண்.140 ம் வழக்கில் காட்டப்பட்டுள்ள விவரத்தையும் தெரிந்து கொண்டோம். வாதி தவறாக தாவா சொத்துக்களை தன்னுடைய குடும்ப சொத்துக்களாக காண்பித்து வழக்காடுவதால் இந்த வழக்கில் எங்களை சேர்க்கசொல்லி மனு தாக்கல் செய்து, அது அனுமதிக்கப்பட்டதன் பேரில் நாங்கள் 11, 12 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

5) மற்ற பிரதிவாதிகள் எங்களை தரப்பினர்களாக சேர்க்க ஏற்பாடு செய்ததாகவும், எங்களுக்கு தாவா சொத்துக்களான மேற்கண்ட சொத்துக்களில் எவ்வித பாத்தியமும் இல்லை என்றும், அது அனைத்தும் வாதிக்கும் 1, 2 பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்டதாக தெரிவிக்கிறார்கள் என்றால் சரியல்ல, அந்த சொத்துக்கள் எங்களுக்கு பாத்தியப்பட்டதாகும். மேற்கண்ட சொத்துக்கள் தவறாக சேர்க்கப்பட்டுள்ளதால் சொத்துக்களை இந்த வழக்கிலிருந்து விடுவிக்குமாறு நாங்கள் கோருகிறோம் என்றால் சரிதான்.

(7, 8 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது).

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.